ஒரு தொகுதியின் நலனை கவனிக்க வேண்டியது யார்? எம்.எல்.ஏவா? எம்.பியா? வார்டு கவுன்சிலரா? ஊழலை ஒழிக்க இதில் தேவைப்படும் சீர்திருத்தம் என்ன?

# 8

இப்போது இருக்கும் நம்முடைய அரசியல் அமைப்பு முறையில் ஏராளமான எம்.எல்.ஏக்கள், எம்.பிகள், பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி கவுன்சிலர்கள் என்று 'பொது நல நிர்வாக'ப் பிரதிநிதிகள் இருப்பதால் இரண்டு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவர்களுக்கெல்லாம் அரசு பணத்தை சம்பளமாக, அலவன்சாக, போக்குவரத்துப் படியாக நிறைய செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இரண்டாவதாக இத்தனை பேர் ஒவ்வொரு தேர்தலிலும் ஜெயித்து வந்து ஆட்சியைப் பிடிக்க வெண்டுமென்றால். ஒவ்வொரு கட்சியிலும் அத்தனை பேர் வீதம் குறைந்தது நான்கு மடங்கு நபர்களேனும் தேர்தலில் போட்டியிட்டாக வேண்டியிருக்கிறது. இந்த செலவுகள் மிக பிரும்மாண்டமானவை. இவற்றுக்கெல்லாம் பெரும்பணம் தேவைப்படும் சூழல்தான் ஊழல் களை விளையும் கழனியாக இருக்கிறது.

உண்மையில் ஒரு தொகுதியின் நலனை கவனிக்க இத்தனை பேர் தேவையே இல்லை. ஒரே தொகுதியில் நிறைய பஞ்சாயத்து அல்லது நகராட்சி கவுன்சிலர்களும், அதே தொகுதியில் எம்.எல்.ஏவும், அடுத்து எம்.பியும் இருக்கிறார்கள். ஒரு தொகுதியின் அன்றாடப் பிரச்சினை என்பது என்ன ? குடி நீர், மின்சாரம், சாலை, போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு சார்ந்தவைதான். இவற்றையே ஏன் கவுன்சிலர், எம்.எல்.ஏ, எம்.பி மூவரும் கவனிக்க வேண்டும்?

அடிப்படையில் எம்.எல்.ஏ என்ற சொல்லின் விளக்கமே அந்தப் பதவியின் நோக்கத்தை தெரிவித்து விடுகிறது. member of legislative assembly - அதாவது சட்டங்களை உருவாக்கும் மன்றத்தின் உறுப்பினர். எனவே அவர் வேலை சட்டங்களை உருவாக்குவது, நிறைவேற்றுவது, திருத்துவது, மாற்றுவது போன்றவைதான். இதே சட்டம் இயற்றும் வேலையை மாநில அளவில் எம்.எல்.ஏவும் தேச அளவில் எம்.பியும் செய்ய வேண்டும். இதுதான் கோட்பாடு.

எனவே நடைமுறையில் இவர்களுக்கென்று எந்தத் தொகுதியும் தேவையே இல்லை. தொகுதியை கவனிப்பதோ, தொகுதியின் சார்பாகப் பணியாற்றுவதோ இவர்கள் வேலையே அல்ல. அது உள்ளாட்சி உறுப்பினர்களின் வேலை. பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி

கவுன்சிலர்களின் வேலை.

தொகுதி அடிப்படை எம்.எல்.ஏவுக்கே தேவையில்லை என்கிறபோது எம்.பிக்கு நிச்சயம் அவசியம் இல்லை. தவிர இவர்களை தொகுதி அடிப்படையில் தற்போது வைத்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை. ஒரு எம்.எல்.ஏ தொகுதியை ஒரு முறை சுற்றி வருவதற்கே குறைந்தது பத்து நாட்கள் தேவை. எம்.பிக்கு அறுபது நாட்கள் தேவை. தொகுதி அடிப்படையை நீக்கிவிட்டால், எம்.எல்.ஏ, எம்.பி தொகுதிக்கே வருவதில்லை என்ற வருத்தங்களும் உருவாகப் போவதில்லை. தொகுதியில் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்க வேண்டியவர் கவுன்சிலர் மட்டும்தான்.

எம்.எல்.ஏவையே தொகுதிப் பொறுப்புக்கு உள்ளாக்கிய நிலைமை சுமார் 75 ஆண்டுகளுக்கு முந்தையது. அப்போது மக்கள் தொகை குறைவாக இருந்த நிலையில் கவுன்சிலர், எம்.எல்.ஏ இரு பணிகளையுமே ஒருவரிடமே ஒப்படைப்பது சரியாக இருந்திருக்கலாம். ஆனால் அடுத்த 75 ஆண்டுகளில் மக்கள் தொகை சுமார் நான்கு மடங்கு அதிகரித்துவிட்டது. எனவே அன்றாட நிர்வாகத்தை கண்காணிக்கும் பணியை கவுன்சிலரிடமும், கொள்கை, சட்டங்களை வகுக்கும் பணியை மட்டுமே எம்.எல்.ஏ, எம்.பியிடமும் ஒதுக்குவதுதான் தீர்வாக இருக்க முடியும்.

இந்த முடிவு செய்துவிட்டால், அடுத்த பெரிய லாபம் எம்.எல்.ஏக்கள், எம்பிகள் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்துவிடலாம் என்பதுதான். தொகுதி அடிப்படை இருப்பதால்தான் தமிழ் நாட்டில் 234 எம்.எல்.ஏக்களும் இந்திய அளவில் 543 எம்.பிக்களும் தேவைப்படுகிறார்கள்.

தொகுதி அடிப்படையை நீக்கி விட்டால் ஒவ்வொரு மாநிலத்துக்கும் மொத்தமாக நூறு எம்.எல்.ஏக்கள் போதும். மக்களவைக்கு மொத்தமாக இரு நூறு எம்.பிகள் போதும். எல்லா மாநிலங்களுக்கும் சமமான எம்.பி எண்ணிக்கை அளித்தால்தான் உண்மையான மாநில சமத்துவம் வரமுடியும்.

தொகுதி அடிப்படை இல்லையென்றால் எந்த அடிப்படையில் எம்.பிகளையோ எம்.எல்.ஏக்களையோ தேர்ந்தெடுப்பது?

கட்சி அடிப்படை மட்டும்தான். அதாவது வாக்குச் சீட்டில் கட்சிகளின் பெயரும் சின்னமும் மட்டுமே இருக்கும். உங்களுக்குப் பிடித்த கட்சிக்கு நீங்கள் வாக்களிக்கலாம். கடைசியில் மொத்த வாக்குகளில் எந்த கட்சிக்கு எவ்வளவு வாக்கு கிடைத்தது என்று கணக்கிட்டு அதற்கேற்ப எம்.எல்.ஏ சீட் தரப்படும். ஒரு கட்சிக்கு பத்து சதவிகித வாக்கு கிடைத்திருந்தது என்றால் மொத்த எம்.எல்.ஏ சீட்டுகளான 200ல் அதற்கு 20 சீட் தரப்படும். இதன்படி எல்லா கட்சிகளுக்கும் அவை பெற்ற வாக்கின் அடிப்படையில்

சீட் கிடைக்கும். பிறகு அந்தக் கட்சி தனக்குக் கிடைத்த சீட்டுகளுக்கான எம்.எல்.ஏக்கள் யார் யார் என்று பெயர்களை அறிவிக்கலாம். இதே போல எம்.பி தேர்தலிலும் செய்ய வேண்டும்.

இந்த முறையைப் பின்பற்றினால் தனியே தலித் தொகுதிகளோ, பெண்கள் தொகுதிகளோ தேவைப்படாது. ஒவ்வொரு கட்சியும் தனக்குக் கிடைத்த எம்.எல்.எ, எம்.பி சீட்டில் இத்தனை சதவிகிதம் தலித், பெண் பிரதி நிதிகளை நியமிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை செய்து விடலாம். தவிர ஒரு மகளிர் கட்சியோ தலித் கட்சியோ, இந்த தேர்தல் முறையில் எல்லா தொகுதிகளிலும் உள்ள பெண்கள், தலித்கள் ஓட்டைப் பெற்று தானே கணிசமான சீட்டுகளை அடைய முடியும்.

இந்த முறையில் பல வசதிகள் உண்டு.

1. கட்சிக்கு இப்போது கிடைக்கும் ஓட்டுக்கும் சீட்டுக்கும் சம்பந்தம் இல்லை என்ற தவறு நீக்கப்படும். உதாரணமாக 1996 தேர்தலில் அ.தி.மு.கவுக்கு கிடைத்த ஒட்டு சதவிகிதம் 21.50. ஆனால் சீட்டு வெறும் நான்குதான். இதே கட்சிக்கு 2001ல் கிடைத்த ஓட்டு சதவிகிதம் 29.92. இந்த முறை 132 சீட்டுகள் ! 1967ல் காங்கிரஸ் கட்சி ஆட்சியை இழந்த தேர்தலில் அதற்குக் கிடைத்த ஓட்டு சதவிகிதம் 41.38. எம்.எல்.ஏ சீட் வெறும் 50. ஆனால் காங்கிரசை விட குறைவான ஓட்டுகள் ( 40.77 சதவிகிதம்) பெற்ற தி.மு.க 138 சீட்டுடன் ஆட்சியைப் பிடித்தது.
2. விகிதாசார அடிப்படையில் கட்சி நியமிக்கும் ஒரு எம்.எல்.ஏ மோசமானவராக இருந்தால் அவரை மாற்ற வசதி ஏற்படும். வேறு ஒருவரை கட்சி நியமிக்கமுடியும்.
3. கட்சிக்கு இந்த அதிகாரம் வருவதால் ஒவ்வொரு கட்சியும் தன் உட்கட்சி தேர்தல்களை ஒழுங்காக நடத்தாவிட்டால் அந்தக் கட்சியின் அங்கீகாரமே போய்விடும் என்ற சட்டத்தையும் எற்படுத்த முடியும்.
4. உலகத்தில் பிரிட்டன், அதன் முன்னாள் அடிமை நாடுகள், அமெரிக்கா தவிர மீதி பெரும்பாலான நாடுகளில் (ஜெர்மனி, ஸ்வீடன், ஆஸ்திரேலியா, ஜப்பான்,ரஷ்யா,இஸ்ரேல்..) எல்லாவற்றிலும் விகிதாசார முறைதான் பின்பற்றப்படுகிறது.
5. இப்போதுள்ள தேர்தல் முறையில் ஒருவருக்கு 49 ஓட்டு கிடைத்தாலும் எதிர்த்தவர் 51 ஓட்டு வாங்கியதால் அவர்தான் வெல்வார் என்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது. அந்த 49 வாக்குகளுக்கு பிரதிநிதித்துவமே கிடையாது. அவர்களில் பலர் அதிருப்தியடைந்து எதிர்காலத்தில் ஓட்டளிக்காமலே போகலாம். ஒவ்வொரு தேர்தலிலும்

இந்தியாவில் சராசரியாக 55 சதவிகிதம் வாக்குகள் மட்டுமே பதிவாகின்றன. விகிதாசார முறையில் ஒவ்வொரு ஓட்டுக்கும் பயன் இருப்பதால் இன்னும் அதிகம் பேருக்கு வாக்களிக்க உற்சாகம் ஏற்பட்டு ஜன நாயகம் வலுவடையும்.

6. எந்த கட்சியையும் பிடிக்காவிட்டால் 49 ஓ பிரிவின் கீழ் அதைப் பதிவு செய்ய இப்போதே தேர்தல் சட்டத்தில் இடம் இருக்கிறது. இதை எலெக்ட்ரானிக் ஓட்டு மெஷினிலும் சேர்க்கக் கோரி உச்ச நீதி மன்றத்தின் முன்பு மனு செய்யப்பட்டுள்ளது. விகிதாசார முறையுடன் இதுவும் இணைந்தால் மக்களின் கருத்துக்கு நிஜமான பிரதிபலிப்பு தேர்தலில் கிட்டும்.

7. விகிதாசார முறையில் ஒவ்வொரு கட்சியின் உண்மை செல்வாக்கு தெரிந்துபோய் விடுவதால், கூட்டணிகள் அமைப்பதும் பேரங்களும் நியாயமான முறையில் நடக்க முடியும்.

உள்ளூர் சிவிக் பிரச்சினைகளை கவனிக்க வேண்டிய பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சிகளில் மட்டும் கட்சி அடிப்படையை ஒரேயடியாக நீக்கிவிட வேண்டும். இங்கே கட்சிக்காரர்கள் உட்பட சுயேச்சைகள் வரை யாரும் தனி நபராக கட்சி சின்னம் இல்லாமல் போட்டியிடலாம். இதன் மூலம் உள்ளூரில் உண்மையாகவே மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் கட்சி சார்பற்ற சமூக நலத் தொண்டர்கள் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு பெருகும்.

இந்த சீர்திருத்தத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையில் நேரடி எம்.பி தேர்தலையே கூட ஒழித்துவிடமுடியும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏக்கள் எம்.பிகளைத் தேர்ந்தெடுத்தால் போதுமானது. அதாவது மக்களவை மாநிலங்களவை என்ற இரண்டு தேவையில்லை. இந்த முறையை மேற்கொண்டால் தேர்தல் செலவுகள் பெருமளவு குறையும்.

இப்படி, தேர்தலில் கட்சிகளின் செலவுகளைக் குறைத்து அவற்றை அரசே நேரடியாக மேற்கொள்வது, எம்.எல்.ஏ எம்.பி சீட்டுகளின் தொகுதி அடிப்படையை நீக்குவதால் எண்ணிக்கையைக் குறைப்பது, விகிதாசார தேர்தல் முறையைக் கொண்டு வருவது முதலிய நடவடிக்கைகளினால் இரண்டு லாபங்கள் கிட்டுகின்றன.

1. பொது வாழ்க்கையில் அரசியலில் நிறைய பணம் தேவைப்படும் நிலை மாற்றப்படும். பெரும்பணம் தேவைப்படாததால் கட்சிச் செலவுக்காக கட்சியோ கட்சிக்காரர்களோ ஊழல் செய்வது பெருமளவில் கட்டுப்படுத்தப்படும். இதன் பிறகு ஊழலில் ஈடுபடுபவர்களுக்கு

தண்டனைகளைக் கடுமையாக்குவது எளிதாகிவிடும்.

2. மக்களின் அன்றாடப்பிரச்சினைகளில் உள்ளாட்சி அமைப்புகளும், தேசத்தின் மாநிலத்தின் கொள்கைப் பிரச்சினைகளில் எம்.எல்.ஏ. எம்.பிக்களும் ஈடுபடுத்தப்படுவதால், ஜன நாயகம் இன்னும் விரிவானதாகவும் ஆழமானதாகவும் ஆக்கப்படும்.

இத்தனைக்குப் பிறகும் ஊழல் பெருமளவு குறையும். கட்டுப்படுத்தப்படும் என்றுதானே சொல்கிறீர்கள். முற்றிலுமாக ஊழலின் வேர் எங்கே, அதைத் தேடியெடுத்து அடியோடு ஒழிப்பது எப்படி என்ற கேள்விக்கு பதில் என்ன? என்று கேட்கலாம்.

இதுவரை நம் பார்த்ததெல்லம் ஊழல், லஞ்சம், முறைகேடுகள் அதிகமாக நடமாடுகிற அரசியலில் பணத்தின் ஆதிக்கத்தைக் குறைத்து மக்களின் செல்வாக்கை அதிகரித்து ஊழலைக் குறைப்பது என்ற அலசல்தான். ஆனால் ஊழல் அரசியலில் மட்டும் இல்லை. நமது வாழ்க்கையின் பிற பகுதிகளிலும் இருக்கிறது. வீட்டுக்குள்ளேயே இருக்கிறது. அடம் பிடிக்கும் குழந்தைக்கு லஞ்சம் கொடுத்து சமாளிப்பதில் கூட அதன் சல்லி வேர் இருக்கிறது.

எல்லா ஊழலுக்கும் அடிப்படை பேராசைதான். ஆசை நியாயமானது. பேராசைதான் ஆபத்தானது. ஆசையும் கூட நம்முடைய உண்மையான தேவைகளின் அடிப்படையில் இல்லாதபோது பேராசையாகிவிடுகிறது. நம்முடைய உண்மையான தேவை என்ன என்பதை கணிப்பதில் தெளிவு வேண்டும்.

இந்தத் தெளிவு மனித வாழ்க்கையில் சிலருக்கு உடனடியாகவும் பலருக்கு மெல்ல மெல்ல அனுபவங்களின் சேர்க்கையிலுமாக வாய்க்கிறது. இந்தத் தெளிவை ஏற்படுத்துவதில் மிகப் பெரும் பங்கை குடும்பமும், கல்வி நிலையமும், பண்பாடும் வகிக்கின்றன. தெளிவின்மையையும் அவை ஏற்படுத்த முடியும். ஊழலின் வேர் அந்தத் தெளிவின்மையிலும் அடங்கியிருக்கிறது.

அந்தத் தேடல் பின்னொரு சமயம்.

**(முற்றும்)**